# பத்திரிகை செய்தி

## நிலத்தின் குறுக்கே செல்லும் மின் கம்பியை அப்பறப்படுத்த லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் மின்வாரிய போர்மேனுக்கு 4 வருட கடுங்காவல் தண்டணையுடன் ரூ2000 அபராதம் விதித்து தீர்ப்பு

நீரகிரி மாவட்டம், கோத்தகிரி குமரன் காலனியை சேர்ந்த பெயின்டர் வேலை செய்யும் திரு.ரஜபிரகாஷ் என்பவர் கடந்த 2014-ம் வருடத்தில் ஜக்கனாரை பஞ்சாயத்திற்கு உட்பட்ட கெரடா பகுதியில் 3 செனட் நிலத்தை சரவணன் என்பவரிடமிருந்து ஆவண எண்:1062/2014-ன் படி கோத்தகிரி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து விலைக்கு வாங்கியள்ளார். அந்த நிலத்தில் வீடு கட்ட தடையாக நிலத்தின் குறுக்கே செல்லும் மின்சார வாரிய மின் கம்பியை தனது நிலத்திலிருந்து அப்புறபடுத்தி நிலத்திற்கு வெளியே செல்ல ஏற்பாடு செய்ய கோத்தகிரி வெஸ்ட் புருக்கில் உள்ள மின்சார வாரிய அலுவலகத்தை அணுகி விண்ணப்பித்துள்ளார். மின் வாரிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் நிலத்தை ஆய்வு செய்து சென்றுள்ளார்கள். மின் கம்பிகளை அப்புரபடுத்தி புதிய மின்கம்பம் பொருத்தும் பணியை மேற்கொள்ள ஆகும் செலவிற்கு 14.05.2014-ம் தேதி ரூ.10,640-ஐ திரு.ரஜபிரகாஷ் மின்வாரிய அலுவலகத்தில் பணமாக செலுத்தி அதற்குண்டான இரசீதையும் பெற்றுள்ளார். பின்னர் 3 மாத காலமாகியும் மின்சார வாரிய அலுவலர்கள் யாரும் வந்து மின்கம்பியை அப்புறபடுத்தும் பணியை மேற்கொள்ளாததால் 11.08.2014-ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் போர்மேன் திரு.ஜெயபிரகாஷ் அவர்களை சந்தித்து மின் கம்பிகளை அகற்றும் பணியை முடித்து தருமாறு கேட்டுள்ளார். அப்போது திரு.ஜெயபிரகாஷ் ரூ.4,000-ஐ தனக்கு லஞ்சமாக கொடுத்தால்தான் பணியை முடித்து தர முடியும் என்றும் இல்லையென்றால் இன்னும் 3 மாத காலங்களுக்கும் மேல் ஆகும் என்றும் கூறியுள்ளார். அதற்கு திரு.ரஜபிரகாஷ் தன்னால் அவ்வளவு பணம் தரமுடியாது எனவும் வீடு கட்ட அதிக பணம் தேவைபடும் எனவும் கொஞ்சம் குறைத்துகொள்ளுமாறும் கேட்டுள்ளார். அதற்கு திரு.ஜெயபிரகாஷ் 13.08.2014-ம் தேதி கோத்தகிரி வெஸ்ட் புருக்கில் உள்ள மின்சார வாரிய அலுவலவத்தில் தன்னிடம் வந்து கொடுக்குமாறு கூறியுள்ளார். திரு.ஜெயபிரகாஷ் அவர்களுக்கு

லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாததால் 13.08.2014-ம் தேதி திரு.ரஜபிரகாஷ் அவர்கள் நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் புகார் கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில் நீலகிரி மாவட்ட ஊ.த.க பிரிவு குற்ற எண்.1/2014/AC/NI, ஊழல் தடுப்பு சட்ட பிரிவு 7-ன் கீழ் வழக்கு பதிவு செய்து பொறிவைத்து பிடிக்கும் நடவடிக்கை மேற்கொண்டு, திரு.ரஜபிரகாஷ் அவர்களிடமிருந்து திரு.ஜெயபிரகாஷ் ரூ.4,000-ஐ லஞ்சமாக பெற்றபோது கையும் களவுமாக பிடித்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பியுள்ளார். புலன் விசாரணை மேற்கொண்டு 2015-ம் ஆண்டு குற்ற பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. உதகமண்டலம் உதவி அமர்வு நீதிமன்றம் / சார்பு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்த வழக்கில் 09.01.2024-ம் தேதி ஊழல் தடுப்பு சட்டம், 1988 பிரிவு 7-ன் கீழ் 3 வருட கடுங்காவல் சிறைதண்டனையுடன் 2,000 ரூபாய் அபராதம் மற்றும் ஊழல் தடுப்பு சட்டம், 1988 பிரிவு 13 (2) r/w 13 (1)-ன் கீழ் 4 வருட கடுங்காவல் சிறைதண்டனையுடன் 2,000 ரூபாய் அபராதம் வதித்தும் மேற்படி தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியுள்ளார்.